සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

හින්දු ශිෂ්ටාචාරය I
இந்து நாகரிகம் I
Hindu Civilization I

46 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.

※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.

※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி (×)** இடுவதன் மூலம் காட்டுக.

**1.** இசை மரபின் தோற்றுவாயாகக் கருதப்படும் வேதம்
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) சாம வேதம்
(4) அதர்வ வேதம் (5) தனுர் வேதம்

**2.** நால்வகை வருணக் கட்டமைப்பின் தொடக்கத்தைச் சுட்டும் இருக்கு வேதப்பாடல்
(1) அக்கினி சூக்தம் (2) முனி சூக்தம் (3) நாஸதீய சூக்தம்
(4) பிரம்மச்சரிய சூக்தம் (5) புருஷ சூக்தம்

**3.** இருக்கு வேதம் போற்றும் தெய்வங்களின் வரிசையில் விண்ணைச் சார்ந்த தெய்வங்களுள் இரண்டின் பெயர்களைக் கொண்ட சோடி
(1) மித்ரன், பிருகஸ்பதி (2) வருணன், விஷ்ணு (3) அக்கினி, பிருகஸ்பதி
(4) வாயு, பர்ஜன்யன் (5) இந்திரன், உருத்திரன்

**4.** விஷ்ணுவின் அவதாரங்களுள் இரண்டின் பெயர்களைக் கொண்ட சோடி
(1) அனந்தசயனர், கிருஷ்ணர் (2) மத்ஸ்யம், வாமனம் (3) நாராயணன், வியாசர்
(4) இராமர், பாதராயணர் (5) கல்கி, வைகுந்தப்பெருமாள்

**5.** சிந்துவெளி நாகரிகத் தொல்பொருளாய்வுக்குத் தலைமை வகித்தவர்
(1) வில்லியம் ஜோன்ஸ் (2) சேர் ஜோன் மார்ஷல் (3) அலெக்ஸாண்டர் கன்னிங்காம்
(4) மக்ஸ்முல்லர் (5) கோல்புரூக்

**6.** 'சேதுகாவலர்' என்ற விருதுப்பெயரால் சுட்டப்பட்டவர்கள்
(1) சோழர்கள்
(2) ஆரியச் சக்கரவர்த்திகள்
(3) பல்லவர்கள்
(4) கோட்டை இராச்சிய அரசர்கள்
(5) விஜயநகர நாயக்கர்கள்

**7.** மரபுவழி ஊடக வகையுள் அடங்குவது
(1) வானொலி (2) விளம்பரப்பலகை (3) ஒலிநாடா
(4) முரசு (5) தொலைபேசி

**8.** 'சைவ சித்தாந்த மார்க்கன்' (சைவ சித்தாந்த வழியில் நிற்பவன்) என்ற விருதுப் பெயரைக் கொண்ட பல்லவ மன்னன்
(1) சிம்மவிஷ்ணு (2) ஸ்கந்தவர்மன் (3) இராஜசிம்மன்
(4) மகேந்திரவர்மன் (5) நந்திவர்மன்

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



9. அத்வைதத்தில் சுட்டப்படும் மாயையின் உள்ளதை மறைக்கும் ஆற்றல்
(1) அப்பிரதக்சித்தி (2) அநிர்வசனீயம் (3) ஆவரணம்
(4) பிரகிருதி (5) இருள்

10. 'இந்து சமயக் கலைக்களஞ்சியம்' எனப் போற்றப்படும் நூல்கள்
(1) வேதங்கள் (2) ஸ்மிருதிகள் (3) ஆகமங்கள்
(4) உபநிடதங்கள் (5) இதிகாசங்கள்

11. பகவத்கீதையில் 'செயலில் துறவு' என்ற கொள்கையைக் குறிப்பிடும் யோகம்
(1) தியான யோகம் (2) பக்தி யோகம் (3) கர்ம யோகம்
(4) ஞான யோகம் (5) இராஜ யோகம்

12. பரோபகாரச் சேவை நெறியினையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்து காட்டிய நாயனார்
(1) திருஞானசம்பந்தர் (2) திருநாவுக்கரசர் (3) சுந்தரர்
(4) மாணிக்கவாசகர் (5) சேக்கிழார்

13. இலங்கையில் சைவசமய அறிவுப்பரம்பல் தொடர்பில் 'சைவத் திருக்கோயிற் கிரியை நெறி' என்ற விளக்க நூலை எழுதிய நல்லறிஞர்
(1) மட்டக்களப்பு அருணாசலதேசிகர்
(2) நல்லூர் ஆறுமுகநாவலர்
(3) இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா
(4) பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
(5) காசிவாசி செந்திநாதையர்

14. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் கோயிலின் வரலாறு தொடர்பான நூல்களில் இரண்டின் பெயர்களைக் கொண்ட சோடி
(1) தேவாரப்பதிகம், தட்சிணகைலாச மான்மியம்
(2) மட்டக்களப்பு மான்மியம், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை பாடிய தான்தோன்றீச்சரப் பதிகம்
(3) சூத சங்கிதை, மத்ஸ்யபுராணம்
(4) பெரியபுராணம், மகாவம்சம்
(5) தாடாவம்சம், இதிகாசபுராணம்

15. "சத்தியமான பொருள் ஒன்றே; அதனையே ஞானியர் பல நிலைகளிற் போற்றுவர்," இந்த வாக்கியம் முதன் முதலில் இடம் பெறும் நூல்
(1) இருக்கு வேதம் (2) சாம வேதம் (3) யசுர் வேதம்
(4) இதிகாசம் (5) வேதாங்கம்

16. சிந்துவெளி நாகரிகம் அமைந்துள்ள மொகஞ்சதாரோ நிலப்பகுதி தற்பொழுது எந்நாட்டில் அமைந்துள்ளது?
(1) இந்தியா (2) பாகிஸ்தான் (3) நேபாளம்
(4) சீனா (5) பங்களாதேஷ்

17. அட்டமா சித்திகள், ஆறு வகை ஆதாரங்கள் என்பன பற்றிக் கூறும் சிவகாமப் பகுதி
(1) சரியாபாதம் (2) கிரியாபாதம் (3) யோகபாதம்
(4) ஞானபாதம் (5) சத்திநிபாதம்

18. சிவாகமஞ் சார்ந்த ஆலயக் கிரியைகளை ஒழுங்காக வழிப்படுத்துவன
(1) பிராமணங்கள் (2) பத்ததிகள் (3) சிரௌத சூத்திரங்கள்
(4) கல்ப சூத்திரங்கள் (5) வேதாங்கங்கள்

19. "பார்! வாழ்வையும் மரணத்தையும் பார்! அவற்றுக்கிடையே பேதமில்லை பிரிவினை இல்லை" என்ற வாழ்வியல் அறிவுரையினைத் தந்தவர்
(1) துளசிதாசர் (2) நிம்பாக்கர் (3) ஸ்ரீ சைதன்யர்
(4) கபீர்தாசர் (5) மீராபாய்

[பக். 3 ஐப் பார்க்க

**20.** சங்கரர் பாடிய தோத்திர நூல்களில் இரண்டினைக் கொண்டுள்ள தொகுதி
(1) சௌந்தர்யலகரி, கந்தரனுபூதி
(2) சிவானந்தலகரி, பஜகோவிந்தம்
(3) சுப்பிரமணியபுஜங்கம், சிவபுராணம்
(4) சூரிய சதகம், ருக்மணி மங்களம்
(5) மகாலட்சுமி தோத்திரம், வீரபத்திர பஞ்சகம்

**21.** இலங்கையில் பாடல்பெற்ற சிவாலயங்கள் எனப் போற்றப்படுபவை
(1) பொன்னம்பலவாணேஸ்வரம், முன்னேஸ்வரம்
(2) நகுலேஸ்வரம், சந்திரசேகரேஸ்வரம்
(3) திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம்
(4) வானவன் மாதேவீச்சரம், முன்னேஸ்வரம்
(5) வண்ணை வைத்தீசுவரம், மாமாங்கேஸ்வரம்

**22.** பல்லவர்கால சைவ மரபுடன் தொடர்புடையவை
(1) நடராஜப் படிமங்கள், விருபாட்சர் ஆலயம்
(2) நந்திச் சின்னம், கட்டுவாங்கக் கொடி
(3) சோமஸ்கந்த வடிவம், விஜயராஜ ஈஸ்வரம்
(4) கூரம் சிவன் கோயில், ஜல சயனம்
(5) ஷேத்திர வெண்பா, பிரபுலிங்கலீலை

**23.** வட இந்திய பக்தி நெறியாளர்களுள் வான்மீகியின் அவதாரமாகக் கருதப்படுபவர்
(1) இராமானந்தர் (2) ஸ்ரீ சைதன்யர் (3) கபீர்தாஸர்
(4) துளசிதாசர் (5) நாமதேவர்

**24.** 'தேசபக்த மெய்ஞ்ஞானி' எனச் சிறப்பிக்கப்படுபவர்
(1) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (2) சுவாமி விவேகாநந்தர் (3) இராஜாராம் மோகன்ராய்
(4) சுவாமி விபுலாநந்தர் (5) ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்

**25.** தென்னாட்டில் வடகலை, தென்கலை என வைணவப் பிரிவுகள் விரிவடைந்த காலம்
(1) சங்க காலம் (2) அறநூற் காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழப்பெருமன்னர் காலம் (5) விஜயநகர காலம்

**26.** சோதிட அறிஞராக அறியப்படும் மகாபாரத கதாபாத்திரம்
(1) பீஷ்மர் (2) சகுனி (3) துரோணர்
(4) சகாதேவன் (5) யுதிஷ்டிரன்

**27.** தர்மம் பற்றிய விதிகள் தெய்வீகமானவை என்றும் அவை பிருகு முதலிய முனிவர்களுக்கு இறைவனால் உபதேசஞ் செய்யப்பட்டவை என்றும் கூறும் நூல்
(1) ஆத்திசூடி (2) நீதி வெண்பா (3) மனுஸ்மிருதி
(4) சிலப்பதிகாரம் (5) திருக்குறள்

**28.** நீலகண்ட சிவாசாரியரின் பிரம்மசூத்திரத்திற்கான சைவ நோக்கிலமைந்த பாடியத்தை (உரையினை) தமிழில் மொழிபெயர்த்தவர்
(1) அருணாசலதேசிகர் (2) காசிவாசி செந்திநாதையர் (3) தாயுமான சுவாமிகள்
(4) அப்பைய தீட்சிதர் (5) பரஞ்சோதி முனிவர்

**29.** சைவசித்தாந்தத்தில் 'இருண்மலம்' எனச்சுட்டப்படுவது
(1) மாயை (2) ஆணவம் (3) பிராரத்தம்
(4) திரோதாயி (5) கன்மம்

**30.** 'அறவா நீ ஆடும்போது உன்னடியின் கீழ் இருக்க...' என சிவனின் திருவடி நீழலில் இருக்க விரும்பியவர்
(1) திருஞானசம்பந்தர் (2) சுந்தரர் (3) காரைக்காலம்மையார்
(4) மாணிக்கவாசகர் (5) திருநாவுக்கரசர்

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**31.** "நானே பிரபஞ்சம் முழுவதினுடைய தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணம்" என்ற கூற்று இடம்பெறும் நூல்
(1) பகவத்கீதை (2) அணுவியாக்கியானம் (3) தைத்திரீய ஆரண்யகம்
(4) காமிக ஆகமம் (5) சுப்ரபோதம்

**32.** பூர்வதந்திரம், உத்தரதந்திரம் என்ற இரு பிரிவுகளைக் கொண்ட சத்திரசிகிச்சை நூல்
(1) சரகசம்ஹிதை (2) சுஸ்ருதசம்ஹிதை (3) பிருஹத்சம்ஹிதை
(4) சூதசம்ஹிதை (5) தன்வந்திரிசம்ஹிதை

**33.** சாரீரக சூத்திரத்தின் அத்தியாயங்களில் ஒன்றாக அமைவது
(1) உத்தர பாகம் (2) அவிரோதம் (3) அர்ச்சிகம்
(4) சுபக்கம் (5) பிரம்ம பாகம்

**34.** ஒரு பொருள் இன்னொன்றாக மாறாமலிருந்தபடியே மாறிவிட்டதாகத் தோன்றுவதனை விளக்கப் பயன்படுவது
(1) பரிணாமவாதம் (2) சத்காரியவாதம் (3) இருமைவாதம்
(4) விவர்த்தவாதம் (5) சூனியவாதம்

**35.** பெண்ணின் சம உரிமைகள் தொடர்பில் முன்னேற்றகரமான சிந்தனைகளை முன்வைக்கும் ஸ்மிருதிகளாவன
(1) மனுஸ்மிருதி, ஞாக்ஞவல்யஸ்மிருதி
(2) பிருகஸ்பதிஸ்மிருதி, நாரதஸ்மிருதி
(3) பராசரஸ்மிருதி, விஷ்ணுஸ்மிருதி
(4) கார்த்தியானஸ்மிருதி, மனுஸ்மிருதி
(5) நாரதஸ்மிருதி, ஞாக்ஞவல்யஸ்மிருதி

**36.** 'ஜயங்கொண்ட சாளமேக சதுர்வேதி மங்கலம்' தொடர்பாகக் குறிப்பிடும் கல்வெட்டு
(1) மிகிந்தலைக் கல்வெட்டு (2) கந்தளாய்க் கல்வெட்டு (3) பதவியாக் கல்வெட்டு
(4) கோணேசர் கல்வெட்டு (5) கேதீஸ்வரக் கல்வெட்டு

**37.** சமகாலச் செல்நெறியில் இந்து நாகரிகம் உலகளாவிய நிலையில் மேன்மைபெற உதவிவருவது
(1) பொதுக்கூட்டம்
(2) கல்வெட்டுகள்
(3) ஊடக சாதனங்களின் பங்களிப்பு
(4) குருகுலக் கல்வி மரபு
(5) பொது விவாதங்கள்

**38.** மக்களுக்கு அறிவுறுத்தும் பயனுள்ள ஒருமைப்பாட்டு தர்மத்தின் வாசகமாகிய 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது இடம்பெறும் இலக்கியம்
(1) உபநிடத இலக்கியம் (2) இதிகாச இலக்கியம் (3) சங்க இலக்கியம்
(4) காவிய இலக்கியம் (5) திருமுறை இலக்கியம்

**39.** தெய்வங்களுக்குப் பல பெயர்களைக் கூறி வழிபடும் முறையை முதன்முதலாகக் குறிப்பிடுவது
(1) இருக்கு வேதம் (2) யசுர் வேதம் (3) அர்த்த சாஸ்திரம்
(4) அதர்வ வேதம் (5) சாம வேதம்

**40.** 'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே' என ஐந்தெழுத்து மந்திரத்தைப் போற்றியவர்
(1) மாணிக்கவாசகர் (2) சுந்தரர் (3) சம்பந்தர்
(4) சேந்தனார் (5) அப்பர்

[பக். 5 ஐப் பார்க்க

● **41** தொடக்கம் **45** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் தரப்பட்டுள்ள கூற்றுகளை வாசித்து, அவற்றுக்கு மிகப் பொருத்தமானவற்றை பின்வரும் அட்டவணையில் **I, II, III, IV** ஆகிய நிரல்களிலிருந்து தெரிவுசெய்க.

| I | II | III | IV |
|---|---|---|---|
| A வானவன் மாதேவி ஈச்சுவரம் | F பிரமச்சரியம் | K விட்டலர்சுவாமி கோயில் | P விஷ்ணுதர்மோத்திரம் |
| B வீரசைவம் | G கடாரம் | L பிரதிசர்க்கம் | Q தைப்பூசம் |
| C அவனிநாராயணன் | H கிருஷ்ணதேவராயர் | M தாழிக்குமரன் | R வானப்பிரஸ்தம் |
| D கிருகஸ்தம் | I மகாத்மியங்கள் | N பத்துமலை | S ஆயிரங்கால் மண்டபங்கள் |
| E சூதர் | J இராஜராஜ ஈஸ்வரம் | O சந்நியாசம் | T சதுர்வேதி மங்கலம் |

**41.** மலேசிய நாட்டில் பரவிய இந்துப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொகுதி
(1) A, G, N, P (2) C, G, N, Q (3) D, H, M, T (4) E, G, K, P (5) C, H, L, Q

**42.** பொலநறுவைக்கால இந்துப் பண்பாட்டுடன் தொடர்புடைய தொகுதி
(1) B, H, M, R (2) A, G, K, S (3) E, J, L, R (4) A, J, M, T (5) C, F, N, S

**43.** நால்வகை ஆச்சிரம நிலைகளுடன் தொடர்புடைய தொகுதி
(1) D, F, O, R (2) E, F, L, R (3) D, F, O, P (4) C, F, N, P (5) B, H, O, R

**44.** விஜயநகர நாயக்கர்கால இந்து நாகரிகப் பரம்பலுடன் தொடர்புடைய தொகுதி
(1) C, H, M, P (2) E, J, N, S (3) B, H, K, S (4) A, J, K, S (5) D, H, K, Q

**45.** புராண மரபுடன் தொடர்புடைய தொகுதி
(1) B, G, M, T (2) D, J, O, T (3) C, H, O, Q (4) A, G, L, R (5) E, I, L, P

PAST PAPERS WIKI

● **46** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**46. மெய்கண்ட சாத்திரங்களின் மரபு**

(1) சைவசித்தாந்த சாத்திர நூலாகிய சிவஞானபோதத்தின் ஆசிரியர் மெய்கண்டார் ஆவார்.
(2) சைவ நாயன்மார்களின் திருமுறைகளுக்கு சந்தான குரவர்கள் இயற்றிய சித்தாந்த நூல்கள் இலக்கணம் போன்றவையாகும்.
(3) சிவஞானபோதம் ரௌரவ ஆகமப் பொருளை விளக்கும் வகையில் அமைந்தது என்பர்.
(4) சிவஞானசித்தியார் சிவஞானபோதத்தின் வழிநூலாகும்.
(5) சிவஞானசித்தியாரின் ஆசிரியர் மனவாசகங்கடந்ததேவர் ஆவார்.

**47. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் இந்துப் பண்பாட்டு வளர்ச்சி**

(1) கிறிஸ்தவ மிஷனரிகளின் செயற்பாடுகளுடன் போட்டியிட்டு நிகழ்வுற்றது.
(2) கண்டன மரபினால் உரமூட்டப்பட்டது.
(3) சைவப்பிரகாச வித்தியாசாலைகள் தோற்றம்பெற வித்திட்டது.
(4) இராமகிருஷ்ணமிஷன், இந்து வித்தியாவிருத்திச் சங்கம் ஆகியவை எழுச்சிபெற உதவியது.
(5) சைவ உதயபானு, இந்துசாதனம் ஆகிய பத்திரிகைகள் தோன்றுவதற்கு வழிசமைத்தது.

**48. இந்து, பௌத்த விழுமியங்கள்**

(1) பௌத்தம் கூறும் ஒழுக்கங்களாகிய சீலங்கள் இந்து சமயத்தில் யோக நெறியுடன் தொடர்புபடுகின்றன.
(2) 'பிரமவிஹார' என பௌத்தம் வலியுறுத்துவது இந்து சமயத்தில் ஒழுக்கங்களைக் குறிப்பிடுகின்ற வகையில் ஒற்றுமையுறுகின்றது.
(3) மனிதன் தவிர்க்க வேண்டிய தீய ஒழுக்கங்களாகிய களவு, பொய்கூறல், புறங்கூறல் போன்றவை இரு சமயங்களுக்கும் பொதுவானவையாகும்.
(4) இந்து சமயத்தைப் போன்றே பௌத்தமும் உடலாலும் உள்ளத்தாலும் வாக்காலும் மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்கள் பற்றி விபரிக்கின்றது.
(5) பௌத்தம் குறிப்பிடும் அட்டசீலமானது இந்துக்களின் அட்ட மூர்த்திக் கோட்பாட்டுடன் தொடர்புடையது.

**49. அனந்தசயன வடிவம்**

(1) முக்காலமும் உணர்ந்த அறிதுயில் நிலையைச் சுட்டும்.
(2) சேசாயி, திருவரங்கர் முதலிய பெயர்களில் அழைக்கப்படும்.
(3) எட்டு நாகங்களில் ஒன்றான அனந்த நாகத்துடன் தொடர்புடையது.
(4) பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் காணப்படுகிறது.
(5) விஷ்ணுவின் உக்கிர வடிவங்களில் ஒன்றாகும்.

**50. ஆழ்வார்களும் வைணவ சமய வளர்ச்சியும்**

(1) சோழப் பெருமன்னர் காலத்தில் ஆழ்வார்கள் தோன்றி வைணவத்தை வளப்படுத்தினர்.
(2) திருமால் மீது தோத்திரப் பாடல்களை இசையுடன் பாடி வைணவ பக்தியை வளர்த்தனர்.
(3) அன்பை விளக்காகவும் ஆர்வத்தை நெய்யாகவும் கொண்டு ஆன்ம ஒளி விளக்கேற்றி திருமாலை வழிபட்டனர்.
(4) மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு ஆழ்வார்கள் அடித்தளமிட்டனர்.
(5) ஆழ்வார்கள் தமது பிரபந்த ஆக்கத்திற்குத் திருமுறைகளை ஆதாரமாகப் பயன்படுத்தினர்.

❋ ❋ ❋

Past Papers Wiki



AL/2025/46/T-II

සියලු ම හිමිකම් ඇව්රිණි / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

හින්දු ශිෂ්ටාචාරය II
இந்து நாகரிகம் II
Hindu Civilization II

46 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இலிருந்து எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** இந்து தத்துவ வளர்ச்சிக்கு உபநிடதங்கள் மூலாதாரமாக விளங்குமாற்றை மேல்வரும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

(அ) உபநிடதம் என்ற சொல்லின் விளக்கம் (02 புள்ளிகள்)

(ஆ) பிரமம் பற்றிய கருத்துக்கள் (06 புள்ளிகள்)

(இ) ஆன்மா தொடர்பான விளக்கம் (06 புள்ளிகள்)

(ஈ) பிற்காலத் தத்துவங்களின் வளர்ச்சிக்கான பங்களிப்பு (06 புள்ளிகள்)

**2.** நவீன இந்து சமய சீர்திருத்த இயக்கங்களின் வரிசையில் ஆரிய சமாஜம் பெறும் முக்கியத்துவத்தினை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) தோற்றம் (04 புள்ளிகள்)

(ஆ) சமயப் பணிகள் (08 புள்ளிகள்)

(இ) சமூகப் பணிகள் (08 புள்ளிகள்)

**3.** தமிழகத்தில் பல்லவர்காலக் கோயிற் கட்டடக்கலையின் படிமுறை வளர்ச்சியை மேல்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

(அ) குடைவரைக் கோயில்கள் (06 புள்ளிகள்)

(ஆ) மலை தளிகள் (06 புள்ளிகள்)

(இ) கற்றளிகள் (08 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

## பகுதி II

**4.** வேதாந்த தத்துவ வளர்ச்சியில் விசிட்டாத்வைத வேதாந்தக் கோட்பாட்டின் சிறப்பம்சங்களை மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.

(அ) 'விசிட்டாத்வைதம்' என்ற சொல்லின் பொருள் விளக்கம் (02 புள்ளிகள்)

(ஆ) கடவுட் கொள்கை (06 புள்ளிகள்)

(இ) ஆன்மக் கொள்கை (06 புள்ளிகள்)

(ஈ) வீடுபேறும் வீடுபேற்றுக்கான வழிமுறையும் (06 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்த தத்துவ மரபில் மேல்வருவன பெறுகின்ற முக்கியத்துவத்தைப் பரிசீலிக்குக.

(அ) பதி இலக்கணம் (06 புள்ளிகள்)

(ஆ) ஆணவம் (06 புள்ளிகள்)

(இ) ஆன்ம விடுதலை (08 புள்ளிகள்)

**6.** இலங்கையின் இந்துப்பண்பாட்டு வளர்ச்சிக்கு சுவாமி விபுலாநந்தர் ஆற்றிய பணிகளை விபரிக்குக.
(20 புள்ளிகள்)

**7.** இந்துக்கல்விப் பாரம்பரியத்தில் குருகுலக்கல்வியின் முக்கியத்துவத்தைப் பரிசீலனை செய்க.
(20 புள்ளிகள்)

**8.** இந்துக்களின் வாழ்வியலில் சோதிடக்கலை பெறுகின்ற முக்கியத்துவத்தினை மதிப்பீடு செய்க.
(20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library